**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

O.S.No.134/2010 **நாள்– 31.01.2024**

வாதிகள் தரப்பு சாட்சியாகிய வா.சா.3 ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது ஏற்பாட்டின்படி கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபால் | ஜாதி | |
| த–பெ | சுப்பையா | சமயம் | |
| கிராமம் | திருவில்லிபுத்தூர் | தொழில் | இளநிலை உதவியாளர் |
| தாலுகா | திருவில்லிபுத்தூர் | வயது | 58 |

**முதல் விசாரணை**

நான் தற்போது இளநிலை உதவியாளராக ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன் . நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின்பேரில் சார்பதிவாளர் கொடுத்த அனுமதியின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் . நீதிமன்றத்திலிருந்து கோரப்பட்ட 06.01.1989 அன்று எழுதிகொடுத்த பதிவு செய்யப்பட்ட உயிலின் நகல் கொண்டு வந்துள்ளேன் . அந்த உயில் ரெங்கசாமிநாயக்கர் என்பவரால் மகேஷ்வரி என்பவருக்கு எழுதி கொடுத்துள்ளார். அந்த உயிலில் கண்ட சர்வே எண் 340/1. எனக்கு சார்பதிவாளர் கொடுத்த அனுமதி கடிதம் **வாசாஆ–5.** 06.01.1989 தேதியிட்ட உயிலின் சான்றிட்ட நகல் **வாசாஆ–6.**

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் கடந்த 3 வருடங்களாக ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் கொண்டுவந்துள்ள உயில் பத்திரத்தின் எண் 1/89. I.P 3/23 என்னவென்றால் அது அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்த எண்ணாகும் . அழைப்பாணையில் கோரப்பட்ட உயிலில் எந்த கிராமம் மற்றும் எந்த சர்வே எண் சொத்து என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் . 06.01.1989 அன்று ஒரு உயில் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது . நான் கொண்டு வந்துள்ள ஆவணத்தில் 01.06.1989 வரை பதிவு செய்யப்பட்ட உயில்கள்தான் உள்ளது.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 31th day of January 2024.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.**

**(ஓம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவில்லிபுத்தூர்.**